**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.113/2012**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வஜ்ரவேலு | மதம் | : இந்து |
| த/பெ | : முனுசாமி | ஜாதி | : -- |
| வயது | : 68 | கிராமம் | : கார்த்திகேயபுரம் மோட்டூர் |
| தொழில் : | ஓட்டுநர் (ஓய்வு) | வட்டம் | : திருத்தணி |

**12.08.2025**

**வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது பிரமாண வாக்குமூலத்தில் **"கண்ணய்யா மந்தடி ஜெயராம மந்தடியிடம் சர்வே எண்.215/8ல் பூரா விஸ்தீரணம் 18 செண்ட்டில் 12 செண்ட் கிரையம் பெற்றார்"** என கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு தெரியாது. கண்ணையா மந்தடி 12 செண்ட் கிரையம் பெற்றார் என்ற விவரமும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணமா, பதிவு செய்யப்படாத ஆவணமா என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 12 செண்டில் 6 செண்ட் ஏற்கனவே விற்கப்பட்டதாக சொல்லியுள்ளதில் அந்த விவரமும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

2. 12 செண்ட் எந்த தேதியில் அளந்தார்கள் என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 12 செண்ட்டில் 4 செண்ட் அதிகமாக இருந்தது என்றும் அது அனாதீனம் என்றும் நான் சொல்லியுள்ளேன் என்றால் அங்கு அனாதீனம் இருந்தது. அது எனக்கு தெரியும். அந்த 4 செண்ட் அனாதீனம் என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 4 செண்ட் நிலத்தை கண்ணையா மந்தடிக்கு பின்பு வெங்கடேசன் அனுபவித்து வந்ததாக கூறியிருப்பதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வெங்கடேசனுக்கு அவரது அப்பா செட்டில்மெண்ட் எழுதி வைத்ததாக நான்

சொல்லியுள்ள விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் குடியிருக்கும் இடத்திற்கான கிரைய ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் குடியிருக்கும் நிலம் அனாதீனமா என்றால் பட்டா நிலமாகும்.

3. நான் குடியிருக்கும் நிலத்திற்கான பட்டா எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் நான் உண்மையிலேயே கிரையம் பெற்று என் பெயருக்கு பட்டா இருந்திருந்தால் அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. ராமசாமி முதலியார் அனாதீனத்தை வீட்டு மனை போட்டு விற்றுவிட்டதாக நான் கூறியிருப்பதில் அதற்காக காவல் துறையில் ஏதேனும் புகார் அளித்தோமா என்றால் இல்லை. ராமசாமி முதலியார் பெயரில் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு தமிழ் படிக்க தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 1 பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 1 ஆவணம்தான் ஜெயபாலுக்கு ராமசாமி முதலியார் கிரையம் கொடுத்த கிரைய ஆவணம் என்றால் **(பி.வா.சா.ஆ 1 ஆவணம் சாட்சியிடம் கொடுக்கப்பட்டது)** ஆமாம்.

4. ஜெயபால் செட்டிக்கு கிரையம் கொடுக்கப்பட்ட சொத்து பட்டா நிலமாகதான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் அது அனாதீன நிலம் இல்லை என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 4ல் **"திருத்தணியில் இருந்து எங்கள் கிராமத்திற்கு வரும் ரோட்டுக்கும், வெங்கடேசன் நிலத்திற்கும், இடையில் இருக்கும் அனாதினம் நிலத்தை வீட்டு மனை போட்டு ஜெயபாலுக்கு, ராமசாமி முதலியார் விற்று விட்டார். அந்த இடம் சுமார் 30 வருடங்களாக வெங்கடேசன் அனுபவத்திலதான் இருக்கிறது"** என்று நான் கூறியிருப்பதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும்தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வாதிக்கு வேண்டப்பட்டவர் என்பதால் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)